## FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I
8069811

C

1. District : திருவள்ளூர் மாவட்டம்   PS: ஊழல் தடுப்பு மற்றும் காவல்நிலையம்   Year ஆண்டு   FIR No.: முதஅ. எண் 7/AC/2019/TLR   Date: நாள் 18/12/2019
2. (i) Act சட்டம்: கண்காணிப்பு பிரிவு   Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (திருத்தப்பட்டது 2018)   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 16.12.19 17.12.19   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18/12/19   Time : நேரம் 17.00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18/12/19   Time : நேரம் 17.30 மணிக்கு
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலமாக
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்   வடகிழக்கு சுமார் 33 கி.மீ
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி   கிராம நிர்வாக அலுவலகம் செஞ்சியகரம், ஊத்துக்கோட்டை தாலுக்கா திருவள்ளூர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :   District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்   திரு. சி. விவேக் ரெட்டி   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்   த/பெ கருணாகர ரெட்டி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   31/19   (d) Nationality : நாட்டினம்   Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில்   விவசாயம்   (g) Address : முகவரி   சீனிருப்பம் கிராமம், பெரண்டூர் அஞ்சல் ஊத்துக்கோட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. முருகையன், கிராம நிர்வாக அலுவலர், செஞ்சியகரம் கிராமம், ஊத்துக்கோட்டை தாலுக்கா திருவள்ளூர் மாவட்டம்,
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— NIL —

10. Total value of properties stolen / involved : —NIL —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — NIL —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Imt. N. Sumathi Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18.12.2019 | [signature] 18/12/19
---|---
14. Signature / Thumb Impression of the Complainant / Informant<br>குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /<br>பெருவிரல் இரேகைப் பதிவு | Signature of the Officer in-charge, Police Station<br>காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.12.2019 at 12.30 hrs

Name: பெயர் N. Sumathi
Rank: நிலை Inspector of Police .No. எண் ..........
VS, AC, Thiruvallur.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.18(HCL-12)p 2

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.7/AC/2019/TLR, U/s 7 of Prevention of Corruption Act (Amendment ) 2018.**

பணிந்து அனுப்பப்பட்டது.

கடந்த 18.12.2019-ம் தேதி சுமார் மாலை 17.00 மணியளவில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் திருமதி.N.சுமத்ரா, காவல் ஆய்வாளராகிய நான் ஆஜரில் இருந்தபோது, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, பேரண்டூர் அஞ்சல், சீனிகுப்பம் கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு.விவேக் ரெட்டி, த/பெ கருணாகர் ரெட்டி என்பவர் ஆஜராகி இன்று 18.12.2019-ந் தேதியிட்டு அவர் கைபட எழுதி என்னிடம் கொடுத்த புகாரின் விவரம் வருமாறு. அனுப்புநர்: C.விவேக் ரெட்டி, வ 31, த/பெ.கருணாகர் ரெட்டி, சீனிகுப்பம் கிராமம், பேரண்டூர் அஞ்சல், ஊத்துக்கோட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். நான் BBA படித்து முடித்து விட்டு கேளம்பாக்கத்தில் சொந்தமாக பல்பொருள் அங்காடி ஒன்றை நடத்தி வருகிறேன். எனது கிராமத்தில் எனது தந்தையின் பெயரில் உள்ள சுமார் 8 ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் மற்றும் சவுக்கு வைத்து விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி நிலத்தில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் மேற்படி நிலத்தில் சர்வே எண் 161 மற்றும் 186(1C)-ல் 2 ஆழ்துளை கிணறுகள் போட்டுள்ளேன். அதற்கான மின் இணைப்பு வேண்டி பாலவாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மின் பகிர்வு மையத்திற்கு சென்று மின் இணைப்பு சம்மந்தமாக கேட்ட போது மேற்படி இணைப்பிற்கு எந்த சர்வே எண் நிலத்தில் ஆழ்துளை கிணறு போடப்பட்டுள்ளது என்பதை குறித்த வி.ஏ.ஓ சான்று வேண்டுமென்று EB office-ல் கூறியதின் பேரில் நான் எங்க ஊரு கிராம நிர்வாக அலுவலரை செஞ்சியகரத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்குச் சென்று VAO திரு.முருகையன் என்பவரை சந்தித்து மின் இணைப்பு சம்மந்தமாக VAO சான்று வேண்டும் என்று கூறி 16.12.2019 ஆம் தேதி மனு அளித்த போது மேற்படி VAO திரு.முருகையன் மனுவை பெறாமல் என்னிடம் ரூ.15,000/- தந்தால் சான்று தருகிறேன் என்று கூறி மனுவினை வாங்க மறுத்துவிட்டார். நான் அதற்கு பணத்தொகையானது அதிகமாக இருக்கிறது குறைத்துக் கொள்ளுமாறு கேட்ட போது அதெல்லாம் குறைக்க முடியாது என்று கூறி VAO திரு.முருகையன் வா நேரடியாக நிலத்தை பார்க்கலாம் என்று கூறி என்னை அழைத்துச் சென்று சர்வே எண். 161 மற்றும் 186(1C)-ல் உள்ள ஆழ்துளை கிணறுகளை பார்வையிட்டார். அப்போது VAO இரண்டு சர்வே எண்ணிற்கும் சேர்த்து மொத்தமாக ரூ.20,000/- லஞ்ச பணமாக தரும்படி கேட்டார். நான் கொஞ்சம் குறைத்துக்

சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு VAO 100 ரூபாய் குறைந்தாலும் நான் வாங்க மாட்டேன் என்று கூறினார். நேற்று 17.12.2019ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு VAO திரு.முருகையன் அவர்கள் 9415126395-லிருந்து எனது செல்போனில் 9840888120-க்கு தொடர்பு கொண்டு ரூபாய்.20,000/- பணத்துடன் வந்து சந்திக்குமாறும் அதில் 100 ரூபாய் குறைந்தாலும் கையெழுத்து போடமாட்டேன் என்று கூறினார். நான் எனது குடும்ப சூழ்நிலையையும் இயலாமையையும் எடுத்துக் கூறியும் திரு.முருகையன் அவர்கள் ரூபாய்.20,000/- பணத்துடன் சந்திக்குமாறு கறாராக கூறினார். எனக்கு திரு.முருகையன் அவர்கள் கேட்ட ரூ.20,000/- லஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லாததால் இப்புகார் மனுவை அளிக்கிறேன். எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்ட நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் C.விவேக் ரெட்டி) 18.12.2019

Honoured Madam, I received the above complaint on 18 12 2019 at 17.00 hrs and after getting proper permission from DVAC on this complaint, a Preliminary Enquiry was conducted in a discreet manner. Based on the outcome of the Preliminary Enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Murugaian, Village Administrative officer, Senjiagaram Village, Uthukottai Taluk, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.7/AC/2019/TLR u/s 7 of The Prevention of Corruption Act (Amendment) 2018 at about 17 30 hrs on today 18.12.2019 and took-up action

18/12/19

**INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001.**